**Registered Post with Acknowledgement Due**

Ref: SR-II: RTI: F-1183:20-21/ 2891

Date: 12th January, 2021

To

Thiru S.T.Tamizhkumar,
State Information Commissioner,
Tamil Nadu Information Commission,
No.2, Thiagarayar Salai, Eldams Road Junction,
Teynampet,
**Chennai 600 018.**

**Sir,**

**Sub: Application of Shri R.Raja - Information sought under RTI Act, 2005 – - reg.**

**Ref: Your order Ref.No.SA 6918/F/2020 dated 23/12/2020**

Your letter referred above along with application dated 10/07/2020 under RTI Act, 2005 of Shri R.Raja, Virudhachalam has been received at this office from our Neyveli TLC on 02/01/2021.

This office has not received any such application as referred to, in your letter under RTI Act, 2005 from the above applicant here before. However, the information sought in the application is attached herewith at Annexure-I.

Thanking you,

Yours faithfully,

(V.RAJESH)
Sr.General Manager & CPIO
e-mail id: sr2cpio@powergrid.co.in
Tel.No.: 080-23093711

Encl.: As above

Copy to: Shri R.Raja, S/o.Rathinam, West Street, Chinnakappan Village, Periyakappan Post, Virudhachalam

CC to: ED(SRTS-II), Appellate Authority, POWERGRID, SRTS-II, Bangalore - for kind information.

Annexure - I

திரு ஆர்.ராஜா த/பெ.ரத்தினம், மேற்கு தெரு, சின்னகாப்பாங்குளம் கிராமம், பெரியகாப்பாங்குளம் அஞ்சல், விருத்தாசலம் வட்டம் என்பவர் 10-07-2020 தேதியில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்டட விவரங்கள் தொடர்பான பதிலுரை

| வினாக்கள் | வினாக்களின் விவரம் | பதிலுரை |
|---|---|---|
| 1 | விருத்தாசலம் வட்டம், சின்னகாப்பாங்குளம் கிராமத்தில் எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது. அதில் காலம் காலமாக முந்திரி, கரும்பு, மணிலா, நெல், எள் ஆகிய பயிர்கள் சாகுபடி செய்து விவசாயம் செய்து வந்தேன். இறுதியாக கரும்பு பயிர் விவசாயம் செய்து வந்தேன். அப்போது அதிகாரிகள் கரும்பினை வெட்டி, இடத்தினை சுத்தப்படுத்தி கொடுத்தால், மற்றவர்களுக்கு வழங்கும் தொகையினை விட அதிகமாக தருவதாக உறுதி அளித்தனர். நானும் கரும்பு வெட்டி சுத்தம் செய்து கொடுத்தேன். ஆனால், எனக்கு மற்றவர்களை விட மிகவும் குறைவாக பணம் கொடுத்துள்ளார்கள். இந்நிலையில், எனக்கு சொந்தமான நிலத்தினை மின் அழுத்த கோபுரம் 400 கிவோ. அமைப்பதற்காக எனது நிலத்தில் 22 மீட்டர் அளவிற்கு எடுத்துக்கொண்டார்கள். மின் அழுத்த கோபுரத்தின் உயரம் சுமார் 186 அடி ஆகும். அதில் 24 ஒயர்கள் செல்கிறது. ஆனால் எனக்கு மிகவும் குறைவான தொகையை வழங்கியுள்ளார்கள். மற்றவர்களுக்கு வழங்கிய தொகையை போல் எனக்கு வழங்கப்படுமா? கூடுதல் தொகை எப்போது எனக்கு கிடைக்கும் என்ற தகவல் தேவை | மின் கோபுர கட்டுமான பணியின்போது தங்கள் நிலத்தில் உண்டான பயிர் சேதாரங்களுக்கு தங்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட CCTC No. 128/08-04-2018, 78/12-03-2018, 195/02-05-2018 ன்படி தங்களது வங்கி கணக்கில் ரூ.3,67,406/- ரூ.1,01,868/- மற்றும் ரூ.5,52,059/- ஆக மொத்தம் ரூ.10,21,333/- செலுத்தப்பட்டது. மேலும் மின்கோபுரத்தின் அடிப்பரப்பிற்குண்டான நிலத்திற்கு ரூ.1,50,000/- செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகையானது தங்களுக்கு ஏற்பட்ட அனைத்து சேதாரங்களுக்கும் கணக்கில் எடுத்துக் கொண்டு வழங்கப்பட்டுள்ளது. சேதாரம் என்பது இடத்திற்கு இடம் வேறு படும் என்பதால், தங்கள் இடத்திற்கு உரிய இழப்பீடு தங்களுக்கு வழங்கப்பட்டது. மின்பாதை செல்லும் நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையை தவிர, ஏனைய அனைத்து சேதாரங்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட்டு விட்டது. மின்கம்பிகள் செல்லும் பாதைக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கான நில அளவை பணிகள் நடந்து கொண்டிருக்கின்றது. மின்பாதை நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகை வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| 2 | தங்கம் த/பெ.முத்துக்குமரன் அவர்களுக்கு 3-வது மின்னழுத்த கோபுரத்திற்கு எவ்வளவு தொகை வழங்கினீர்கள் என்ற தகவல் தேவை. | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பிரிவு 8(J)-ன்படி 3-வது நபரின் தகவலை தங்களுக்கு வழங்க இயலாது |
| 3 | சுப்பிரமணியன், கொள்ளிருப்பு என்பவருக்கு எவ்வளவு தொகை வழங்கினீர்கள் என்ற தகவல் தேவை. | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பிரிவு 8(J)-ன்படி 3-வது நபரின் தகவலை தங்களுக்கு வழங்க இயலாது |
| 4 | செம்புலிங்கம் த/பெ.சக்கரை அவர்களுக்கு எவ்வளவு தொகை வழங்கினீர்கள் என்ற தகவல் தேவை. | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பிரிவு 8(J)-ன்படி 3-வது நபரின் தகவலை தங்களுக்கு வழங்க இயலாது |
| 5 | மாயகிருஷ்ணன் என்பவருக்கு எவ்வளவு தொகை வழங்கினீர்கள் மற்றும் எத்தனை முந்திரி மரங்களை வெட்டினீர்கள் என்ற தகவல் தேவை. | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பிரிவு 8(J)-ன்படி 3-வது நபரின் தகவலை தங்களுக்கு வழங்க இயலாது |
| 6 | செந்தில், மின் பொறியாளர் எழுதப்படாத பவர்கிரிட் பேப்பரில் கையெழுத்து வாங்கியுள்ளார். எந்த விவரமும் எழுதப்படாமல் கையெழுத்து பெறலாமா? எழுதப்படாமல் என்னிடம் வாங்கிய வெற்று பவர்கிரிட் சிலிப்பினை கேட்டதற்கு தற்போது பதவியில் இருக்கும் தமிழ்வாணன் என்பவர் போலீசை வைத்து நான் வேலையை செய்வேன் என்று கூறியது சரியா என்ற தகவல் தேவை. இது குறித்து சப்-கலக்டரிடம் 21-01-2020 ல் மனு கொடுத்துள்ளேன். எழுதப்படாமல் என்னிடம் கையெழுத்து பெற்றவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற தகவல் தேவை | தங்கள் மனுவில் தெரிவித்தவாறு வெற்று காகிதம் எதிலும் மின் பொறியாளர் எவரும் யாரிடத்தும் கையொப்பம் வாங்கவில்லை. |

11/01/2021

| | | |
|---|---|---|
| 7 | எனது மனுவை மீண்டும் மறு ஆய்வு செய்து என் நிலத்திற்கு அருகில் உள்ளவர்களுக்கு வழங்கிய தொகையை போல் எனக்கு கூடுதல் தொகையை வழங்கப்படுமா என்ற தகவல் தேவை | தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத்தொகை முழுவதும் வழங்கப்பட்டு விட்டது. மேற்கொண்டு வழங்குவதற்கு ஏதுமில்லை. |
| 8 | என் நிலத்திற்கு மேல் மின்னழுத்த கோபுரம் செல்வதால், அடிக்கடி மின்மோட்டார் பழுது ஏற்பட்டு விவசாயம் செய்ய முடியாமல் நஷ்டமடைகிறேன். அதனால், நான் வேறு இடத்திற்கு போர் போடுவதற்கு நஷ்ட ஈட்டுத்தொகை வழங்கப்படுமா என்ற தகவல் தேவை | தங்கள் மனுவில் தெரிவித்தவாறு மின்மோட்டார் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை. வேறு இடத்தில் போர் போடுவதற்கு நஷ்ட ஈடு வழங்க முகாந்திரம் இல்லை |
| 9 | முறைகேடாக பணம் வழங்கிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற தகவல் தேவை. | முறைகேடு ஏதும் நடைபெறவில்லை. |
| 10 | என்னுடைய நிலத்தை பற்றுகை செய்த வகையில் பிறப்பிக்கப்பட்ட L.A.Award copy தேவை | இந்திய தொலை தொடர்பு சட்டம் 1885-ன்படி நில உபயோக உரிமை மட்டுமே செயல்படுத்தப்பட்டுள்ளது. நிலக்கையகம் ஏதும் நிகழ்த்தப்படவில்லை. |

11/01/2021

முதுநிலை துணை பொது மேலாளர்,
பவர்கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா,
உளுந்தூர்பேட்டை.

G. CHANDRAN
SR. DY. GENERAL MANAGER
POWERGRID
ULUNDURPET T.L.C.